
உ

ஓம் சக்தி



கொடிகாமம்

பெரிய நாவலடி

குருவருளும் திருவருளும் பெருகும்

சிவகாமசுந்தரி

# அன்னையின் பாமலர்கள்

( கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள் )

ஆக்கம் :

சொல்லிசைச் செல்வர்

அன்னைதாசன்

வெளியீடு :

ஆலய தர்மகர்த்தா

திரு. ஆ. வேலாயுதபிள்ளை அவர்கள்

02 - 04 - 1996 ( பங்குனி உத்தரம் )

யா. மா. கூ. ச. அச்சகம் கொடிகாமம்.

## வெளியீட்டுரை

## ஓம் சக்தி

அன்னையின் பால் அன்பு கொண்ட மெய்யடியார்களே! அகில உலகமுமே கோயில் என்று போற்றப்படுவது ஆனந்தத்தாண்டவம் புரியும் அப்பன் வீற்றிருக்கும் சிதம் பரமாகும் இவரின் அருகிருக்கும் அகிலலோகநாயகிதான் அன்னை சிவகாமசுந்தரி இவ்வன்னை கோயில் கொண் டருளியிருக்கும் எ ம் ம ா லை ய ம் ஞாமறியாக் காலம் தொட்டு எம் முன்னோரால் வணங்கப்பட்டு வந்துள்ளது

இவ் வாலயம் இன்றுள்ளதைப் போலில்லாமல் ஒரு சிறு குடிசையிலே ஆரம்பத்தில் இருந்து தாயின் திருவருளை நாடி தவித்து வரும் அடியவரின் தாகம் தணிக்கும் வகையில் அன்னை எம்மைக் கருவியாக்கி இன்று நீங்கள் வணங்கித் துதிக்கும் இந் நிலையிலுள்ள அமைப்பில் தனக்கு அரண்மனை அமைத்துள்ளாள். எம் மிடத்தில் எதுவுமில்லை, எல்லாம் அவள் அமைந்ததுவே. இங்கு வந்த சித்தர்கள் தீர்க்கதரிசிகளிற் சிலர் இங்கு இவ்வாலய வளவில் ஓர் இலிங்கம் இருப்பதாகவும் முன்பு ஓர் பெருவிருட்சம் நின்றதாகவும் சொல்கிறார்கள் யாம்மறியோம்

அன்னை தனக்கு ஆலயம் அமைத்து இதன் குட முழுக்கு நடந்தவேளை ஓர் சிறப்புமலர் ( 1995 நவம்பர் 23 ந் திகதி ) வெளியிட இருந்தோம். ஆனால் இற்றை வரை கைகூடவில்லை. இன்று அன்னைதாசன் எனப் படும் இம்மலரின் ஆசிரியர் திரு. க. ஆனந்தராசா அவர் கள் அன்னையைத் தரிசித்தார்கள், பாடினார்கள் ஓர்

இசை சொற்பொழிவையும் நிகழ்த்தினார்கள் அவரது பாடல்கள் சொற்சுவை, பொருட்சுவை, இசைச்சுவை யுடன் கூட பக்திச்சுவை மேம்பட்டு நிற்கின்றன. எனவே அடியார்களும் ஆனந்தித்தார்கள் எனவே அன்னையும் இனிய பாமலர் ஒன்றைக் கேட்டார்.

இதோ இம்மலர் இவ்வடிவத்தில் வரும் என நாம் கனவிலும் நினைக்கவில்லை. இப்படி ஒரு வெளியீட்டை நாம் இதுவரை செய்ததுமில்லை முழுக்க முழுக்க அன் யின் வாக்குப்படி அவள் அருளாலேயே இது வெளி வருகிறது. ஏனைய பஜனை நிகழ்வுகளைப்போல ஒரே ராகத்தில் வரும் பாடல்களின்றி ஒவ்வொன்றும் முத்தான இசைவடிவிம் சத்தான கருத்துக்கள் தங்கியுள்ளமை அன்னை அவருக்குக் கொடுத்த ஆற்றலை வெளிப்படுத் துகின்றது. இது இவர் பாடிய பாடல்களிற் சில இன்னும் பல உள. அன்னையின் சித்தப்படி வெளிவரும் அடியார் கள் அனைவரும் அன்போடு பாடி அன்னையைப் பணி வோம், அவர் இதுபோன்ற இனிய மலர்களை மென் மேலும் பாடி அன்னை புகழ்வளர்க்க அவரின் ஆசியைக் வேண்டிப் பணிகின்றோம். வாழ்க வளர்க

கொடிகாமம்
பெரியநாவலடி சிவகாமசுந்தரி
அம்பாள் தேவஸ்தானம்;

**ஆ. வேலாயுதபிள்ளை**
தர்மகர்த்தா

அருள் மிகு

## கொடிகாமம் பெரிய நாவலடி
## சிவகாமி அம்பாள் ஆலயத்தில்
## வெளியாகும்
## அன்னைதாசனின்
# அன்னையின் பாமலர்கள்

## அணிந்துரை

உரும்பிராயை வதிவிடமாகக் கொண்ட ஆசிரியர் ச. ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்கள் பல பக்திப் பாடல்களை இயற்றி, இசை அமைத்து, அமுத கீதங்களாக இசைத்தும் வருகின்றார். இவரின் தெய்வீகப் பாமலர்கள் என்ற பஜனைப் பாடற் தொகுதியில் துர்க்கா புரத் தோத்திரங்கள், வண்ணை வைதீஸ்வரப் பாக்கள், செல்வச் சந்நிதிக் கந்தன் கனியமுதம், சொக்குவில் சாயி துர்க்கா துதிகள், கல்வியம்பதி வீரபத்திரர் துதி போன்ற அமுத கீதங்கள் காணப்படுகின்றன "தெய்வீகப் பாமலர்கள்" என்ற பக்திப் பாடல் தொகுதிக்கு யாழ். பல்கலைக் கழக தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி இ. பாலசுந்தரம், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இவருடைய குரு பிரமஸ்ரீ ந. வீரமணி ஐயர் போன்ற பிரபல அறிஞர்கள் அணிந்துரை, வாழ்த்துரை, ஆசியுரை போன்றவற்றை வழங்கிக் கௌரவித்துள்ளார்கள். இவர் ஒரு சிறந்த இசைச் சொற்பொழிவாளர் - நல்லை குருமணி அவர்களைப்பற்றி இசைச் சொற்பொழிவாற்றியமைக்கு பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளார். "அம்மா அம்மா என் தாயே" என்ற பாட்டு யாழ்குடா நாட்டில் மாத்திரமல்ல, வெளி நாடுகளில் கூட இசை நாடாமூலம் விரும்பிக் கேட்கப்படுகின்ற ஒரு பாட்டாகும். இவர் ஒரு சிறந்த முன்னணி இசைப் பிரசங்கியார். இவருடைய பாடலில் ஓசை நயம், இசை பக்தியுடன் பாவமும் சேர்ந்து தானும் பாடி மற்றவர்களையும் பாடச் செய்யும் சிறப்பு உண்டு. ஒருமுறை கேட்டவர்கள் இவர் பாடலைப் பலமுறை கேட்க விரும்பி இவர் பஜனைப் பாடல் நடாத்தும் இடங்களைத் தேடிச் செல்வார்கள். இலகு தமிழில், இசையுடன் பாடும் பஜனைப் பாடல்கள் இந்த காலத்தில் தேவை. சிறுவர்கள், பெரியவர்கள், பண்டிதர், பாமரர் என்று

பாராமல் பல நொந்த இதயங்களுக்கு இவர் பாடல் அருமருந்தாக விளங்குகின்றது. இவர் சமய குரவர் போன்றுதானே நல்ல தலங்களுக்குச் சென்று பஜனை பாடி பலரை மகிழச் செய்து வருகின்றார். இவர் சேவை இன்றைய காலகட்டத்தில் மிகத் தேவை. சமயத்தை வளர்ப்பதோடு நொந்த மனங்களின் இடர் தீர்த்தும் வருகின்றார். இவர் வாழ்க! இவர் இசைத்திறன் வாழ்க!

இப்படிப்பட்ட பெரியார் அருள் மிகு கொடிகாமம் பெரிய நாவலடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்தில் வெளியாகும் அன்னையின் பாமலர் என்ற நூலுக்கு அணிந்துரை நல்குமாறு அடியேனை நாடினார்கள். முதலில் தயங்கினேன். பின் எமது ஆலயத்தில் இவர் நடாத்தும் பஜனைகளை ரசித்தவன், அவற்றின் தன்மையை உணர்ந்தவன் என்ற வகையில் எழுதத் துணிந்தேன். அடியவர்கள் தம்மை மறந்து பாடி மகிழ்வதை இவர் பஜனைகளிற் காண்கின்றேன்.

அண்டங்கள் அனைத்தும் சிவசக்திமயம். பசியால் வாடிய பன்றிக்குட்டிக்குப் பன்றியாக வந்து பால் கொடுத்தவர் சிவன். தந்தையைக் காணாது அம்மே, அப்பா! என்று அழுத ஞானக் குழந்தைக்கு அம்மை அப்பராக வந்து முலைப் பாலை ஊட்டச் செய்தவர் சிவபிரான். செம்மனச் செல்விக்குக் கூலியாளாக வந்தவர் இவர். இதேபோல் அம்பாளும் பக்தர்களின் தேவைக்கேற்ப பரா சக்தியாகவோ, துர்க்கையாகவோ, சிவகாமி அம்மையாராகவோ வந்து பக்தர்களின் இடர் களைகின்றாள். சிவனின் பஞ்சகிருத்திய நடனத்திற்கு ஊற்றாக விளங்கும் சிவகாமி அம்மையார், அடியார்களின் நலன்கருதி கொடிகாமத்தில் கோயில் கொண்டுள்ளாள். அடியார்களின் இடர்களை பேசும் தெய்வத்தின் வாயிலாக வெளி வந்து தீர்க்கின்றாள். இக் கோவிலை நல்ல முறையில் திரு. ஆ. வேலாயுதபிள்ளை அவர்கள் நடாத்தி வருகின்றார். இவ் ஆலயம் சிறக்க! தம்பி அன்னைதாசன் பணி மேலோங்குக! சைவப் பணி சிறந்தோங்குக! உலகம் சிறக்க! தமிழ் மக்களுக்கு அமைதியான வாழ்வு கிடைக்க! சிவகாமி அம்மை ஆலயத்தின் புகழ் ஓங்குக!

இராமாவில் கந்தசுவாமி கோவில்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

ம. அருணாசலம்,
தர்மகர்த்தா,

# என்னுரை

என் அன்புக்குரிய அன்னையின் அடியார்களே இடம் பெயர்வின் காரணமாக சைவ நெறியில் வாழ்வாங்கு வாழும் மக்கள் நிறைந்த புண்ணிய பூமியாம் அல்லாரையில், என் அருமை நண்பர் வீட்டில் புகலிடம் கிடைத்த வேளை சைவத்திற்காக தன் வாழ்வைக் கழிக்கும் ஓர் இளம் தொண்டரின் மூலம் கொடிகாமம் பெரிய நாவலடி அன்னை சிவகாம சிந்தரியின் அழகு மிகு ஆலயம் செல்லும் பாக்கியம் கிட்டியது. இதன் அமைவிடத்தையும் அமைப்பையும் இருந்தருளி, எழுந்தருளி ஆகியவற்றின் அருள் ஒளித் திருக்கோலத்தையும் பார்த்ததும் என்னை அறியாத ஓர் ஈர்ப்பு இத் தாயின் மேல் ஏற்பட்டது. இவ்வேளை அனுட்டான நீற்றின் ஒளி விளங்க, அமைதியான தாய்மை நிரம்பிய பார்வையுடனும், கனிவான பேச்சுடனும், பூசைகளின் பொழுது ( ஓமம் வளர்ப்பது உட்பட ) அந்தணப் பெருமக்களின் பாங்குடைய ஓர் தாயாரைக் கண்டேன். அது மட்டுமல்ல இங்கு இவ்வன்னைக்கு பணிசெய்பவர்கள் கூட மாமிசம் ஒறுத்து ஆசார சீலர்களாக தமது பணிகளை பயபக்தியுடன் செய்து வருவதையும் அவதானிக்க முடிந்தது. இப்படிப் பட்ட அன்புச் சுழலில் அன்னை உறைவதற்குச் சொல்லவா ? வேண்டும்.

குறிப்பிட்ட சிலமணி நேரங்களில் மட்டும் மூலவள் அன்னை சிவகாமி இத் தாயினூடாகப் பேசுகின்றாள். அதுவும் தானாக தன் அடியவரைத்தேடி வந்து பேசுகிறாள். பணத்திற்காக அலல பாக்கியசாலிகளிற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். அது கிடைக்கா விட்டாற் தான் என்ன ? அங்கே கருவறையில் மிகப் பிரமாண்ட மாக வீற்றிருக்கிறாள் தில்லைக் கூத்தனின் திருத்தாய் அன்னை சிவகாமி. அருள் மழை பொழிந்த வண்ண முள்ளாள். அவளைப் பார்த்தாலே போதும் பாதிவினை பறந்துவிடும். இதற்குமேலாக அழகு ததும்பும் அருள் ஒளி பாய்ச்சும் பெரும் தங்கச் சிலையாக நிற்கும் எழுந்தருளித் தாய் தன் தண்ணருளைத் தாராளமாக அள்ளி வீசுகிறாள். இவளை எம் ஊனக் கண்களாற் கண்டாலே போதும் கன்ம வினை கடிதேகும். பாவையின் பூசையும் பணி புரிபவர்களின் பணிவும், பண்பும், பக்தியும், ஆசாரமும் அன்னையை அரவணைக்க, அதனால் அவளும் வளர்ந்தது. அடியவர்களையும் வளர்த்து வருகின்றாள். குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலல்லவா ? தென்னாடு செல்லாதவர்கள் இந் நாட்டில் இறைவியை இறைஞ்ச இனிய வாய்ப்பு.

அன்று அன்னை வந்தாள், பேசினாள். அடியேனிடம் அன்னை கேட்டது பாமாலையையே. தாய் பாடவைத்தாள் பாடினேன், பாடுகிறேன். உண்மை என்னவென்றால் எனக்குப் பாடத் தெரியாது. ஆனால் இசை - தாய்தந்த பிச்சை. தமிழ் - அவள், பொருளும் - அவளே. எனவே பாட்டு உங்களுக்குப் புரியும் ஆலய வரலாற்றை அறிய தர்மகர்த்தா அவர்களை நாடினேன் அதை எழுத அதற்கு ஓர் நூல் வேண்டும் சுருக்கமாக...

1. மூன்று நாலு தலைமுறைகளிற்கு முந்திய பரம்பரைச் சொத்து இது.

2. மிகச் சிறிய ஓலைக் குடிசையில் வீற்றிருந்த தாய் இப்பெரும் ஆலய அமைவிடத்தை தானே குறிப்பிட்டார். எதுவுமற்ற நிலையில் திண்டாடும் பொழுது தாமாகவே காரியங்கள் நடைபெற்றன ஆசனக்கல் அமைந்த விதமே அதி அற்புத அருளிற்கு சான்று.

3. பேசும் தெய்வத்தின் கூற்றுப்படி தானே குட முழுக்கையும் நடாத்தி அருளால் அனைவரையும் ஈர்ந்துள்ளாள்.

4. இங்கே முடவர்கள் நடந்திருக்கிறார்கள். ஊமைகள் பேசுகிறார்கள் வைத்தியர்களாற் கைவிடப்பட்ட பல நோயாளிகளைக் காப்பாற்றி இவர்களை இப்பொழுதும் தொண்டு செய்ய வைத்திருக்கிறாள்.

5. நெலிகளாக இருந்த பல குழந்தைகளைத் தாங்கி வெளிநாடுகள் செல்ல வைத்ததுடன் அவர்களின் அழைப்பின் பேரில் அங்கு சென்று அருள் ஆசி வழங்கியும் வருகிறார்கள்.

6. பார்வையற்ற சிலர் பார்வை பெற்றுள்ளர்கள். தாலிப்பாக்கியம் புத்திரப்பாக்கியம் பிணி நீக்கம் பெற்று தாயின் தொண்டு செய்து வருபவர்களையும் காணமுடிகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக சைவநெறியில் தர்மத்தை மதித்து, பண்புடன் விழாக்களை அமைத்து ஆலயத்தில் ரேழிக் கைகளிற்கு இடமின்றி தெய்வீகமாக ஆலயத்தை நிர்வகித்து வருகின்றார்கள். உங்களிற் பக்தியுடையவர்களிற்கும் பாக்கியம் உடையவர்களிற்கும் மட்டுமே அன்னையின் தரிசனமும் ஆறுதல் வார்த்தையும் கிட்டும். என்பது அடியேனின் ஆசையாத நம்பிக்கை. பொருந்துவன் போமின் என்றாற் போகா.

அன்னையையே தஞ்சமெனப் பாடிப் பரவி வரும் சிறியேனைப் பாடவைத்து மலராக்கி ஒலி நாடாவாக்கி உங்கள் முன் தருகிறாள் அன்னை சிவகாமி.

அன்பு அடியார்களே! தெல்லி நகர்த் துர்க்கையைப்பாடி, ஆற்றங்கரை அடிகளைப்பாடி ஒலி நாடாவாக்கி வண்ணை வைத்தீஸ்வரனை பாடி இப்போ பண்டிதன் விநாயகனையும் இராமவிற் கந்தனையும், தன்னையும் அன்னை பாடவைத்துக் கொண்டிருக்கிறாள். அடியேனின் பாடல்கள் குடா நாட்டிலும் கொழும்பிலும் ( சிவன் தொண்டர்கள் வெளியீடு ) பல பதிப்புகளில் வெளிவந்துள்ளன. இயற்கை அன்போடு மெய்யுருகி இசைந்து அன்னையை இசையவைத்து அவள் அருள் பெறுவோமாக.

இந்நூலுக்கு ஆசியுரை தந்த எனது பஜனைகளில் பெரும் ஈடுபாடு கொண்ட அன்பர் திரு ம. அருணாசலம் ( முன்னாள் உபஅதிபர் ) இராமாவிற் கந்தசுவாமி ஆலய தர்மகர்த்தா அவர்களுக்கும், வெளியீட்டுரை தந்து எனது பாடல்களை நூலாக்கி வெளியிடும் இவ்வாலய தர்மகர்த்தா மதிப்புக்குரிய திரு. ஆ. வேலாயுதபிள்ளை அவர்களுக்கும் எனது பணிவான வணக்கங்களும் நன்றிகளும் அன்னையின் அருள் அனைவருக்கும் கிட்டுக.

அன்னையின்றி அகிலமேது !

க. ஆனந்தராசா,
லயாவிளான்,
உரும்பிராய்.

அன்னைதாசன்

உ

# 1. முன்னை முதல்வனைப் பணிவோம்

## காவலாய் வந்திங்கு கா

அன்னைக்கு அரணாகி அருள்புரியும் ஐங்கரனே
முன்னை வினைமுடிக்கும் முதற்பொருளே – உன்னை
ஆவலாய் அழைக்கும் அன்னைதாசன் எனக்கு
காவலாய் வந்திங்கு கா.

அன்னையின் பாலா ஆனை முகவா
ஓம் கணநாதா ஓம்
ஆறுதல் தந்திட எம் முன்னே வா வா
ஓம் கணநாதா ஓம்
தொந்திக் கணபதி தொல்லைகள் தீர்ப்பாய்
ஓம் கணநாதா ஓம்
வந்திக்கின்றோம் வந்தெமை யாள் வாய்
ஓம் கணநாதா ஓம்

அண்டங்கடந்த பொருளாய் அமர்வாய்
ஓம் கணநாதா ஓம்
சண்டப்பெருச் சாளியில் நீ வருவாய்
ஓம் கணநாதா ஓம்
அன்னையும் அப்பனும் உலகென்றுரைத்தவா
ஓம் கணநாதா ஓம்
உன்னையே நம்பினோம் எம் முன்னே வா வா
ஓம் கணநாதா ஓம்

சரணம் சரணம் சங்கரன் புதல்வா
ஓம் கணநாதா ஓம்
அபயம் அபயம் அம்பிகை பாலா
ஓம் கணநாதா ஓம்
ஓம் கணநாதா ஓம் ! ஓம் கணநாதா ஓம் ! !
ஓம் கணநாதா ஓம் ! ! !

## 2. குருபதம் பணிந்து திருவருள் பெறுவோம்

அவனியில் அக இருள் அகன்றிடவே
அவதரிப்பவர் தான் ஞானகுரு

மாணிக்கவாசகர் மனங்கவர
மண்ணிலே வந்தவர் ஞானகுரு
கண்ணிலும் மேலான வாசகத்தின்
கருப்பொருளானவர் ஞானகுரு

( அவனியில் ...

02.4.1996

போதனையுடன் நல்ல சாதனையின்
புகலிடமானவர் ஞானகுரு
வேதனையுறுகின்ற வேளையிலே
தாயைப் போல் வருபவர் ஞானகுரு

குருவருளுடன் நல்ல திருவளும்
பெங்கிட அன்னையின் அடிபணிவோம்
வருகின்ற துயரங்கள் அனைத்தையுமே
குருபதம் பணிவதால் துடைத்திடுவோம்.

( அவனியில் ...

## 3. சிவ நாமம் சிந்தைக்கு இனிக்கும்

சிவனருள் பெற்றிட தினமிங்கு சொல்லுவீர்
சிவ சிவ சிவ சிவ ஓம் ... (2)
சிவ சிவ சிவ சிவ ஓம் ... சிவ சிவ சிவ சிவ ஓம்

( சிவனருள் ...

அரஹர சிவ சிவ அம்பலவாணனை
அனுதினம் வணங்கிடுவீர்
அமைதியை அவன் தருவான் (2)

( சிவனருள் ...

மாலயன் காணாத ஜோதியாய் நின்றங்கே
மமதையை ஒழித்தவனே
மண்ணினில் அமைதியைத்தா (2)

( சிவனருள் ...

பிறையினைத் தலையினிற் சூடிய தேவனே
மறைகளின் முதல்வனே வா
நிறைவினை ஜெகமெங்கும் தா (2)

( சிவனருள் ...

## 4. நாவலடியுறை நாயகி

நம்பினோர் கை தொழும தாயிவளாம் - எங்கள்
நாவலடியுறை நாயகியாம்.
எம்பிணி தீர்த்திடும் ஏந்திளையாம் - அன்னை
எங்களைக் காத்திடும் ஈஸ்வரியாம்.
தெங்கு வளர் தென்மராட்சிதனில் - அன்னை
பொங்கு மருள் மழை பொழிபவளாம்.
தங்க எருதினில் தானமர்ந்து - சிவ
காமி வடிவில் வருபவளாம்
- நம்பினோர்

பங்கஜம் மீதில் இருப்பவளாம் - எங்கள்
பாவோசை கேட்டு வருபவளாம்.
தங்கையர்க்குத் தாலி தருபவளாம் - இவள்
குங்குமங் காத்திடும் குஞ்சரியாம்.
தந்தையர் தம்பியர் தாமழுதால் - இவள்
தாங்காமல் ஓடி வருபவளாம்.
மந்திர தந்திர மாயமெல்லாம் - அன்னை
தந்த திரு நீற்றால் மாறிடுமாம்.
- நம்பினோர்

ஓங்கிய கோபுரங் கொண்டவாளாம் - இங்கு
ஏங்கியவர் துயா களைபவளாம்.
தாங்கிய சூலப் படையுடனே - அன்னை
பாங்கியர் சூழ வருபவளாம்.
அன்னையே அன்னையென்றலறுபவர் - தன்னை
நண்ணி வந்தே துயர்தீர்ப்பவளாம்.
திண்ணமாய் மென் மலர்ப் பாதம் பணிபவர்
எண்ணங்கள் ஈடேற்றி வைப்பவளாம்.
- நம்பினோர்

## 5. இசையில் உருகி அருகில் வருவாய்

சிவகாம சுந்தரியே
அம்பிகையே எமக்கருள்வாய் நீ

கொடிகாமந் தன்னில் குடி கொண்டதாயே
அடியார்கள் துன்பம் தனை நீக்குவாயே
கொடுமை ... வறுமை ... பகமை ... பெருகி ...
அலைமோதும் எமக்கிங்கே ஆறுதல் தா தா
சுந்தரியே துயர் தீர்த்திட வா (2)
சிவகாம ...

ஏனிந்த மௌனம் என்தாயே நீ சொல்
நான் உந்தன் பிள்ளை நீயே என் அன்னை
அன்னை ... தந்தை ... ஆசான் ... நீயே
உன்னையே நம்பினேன் என்முன்னே வா வா
அம்பிகையே என் முன் ஓடி வா (2)

சிவகாம ...

பூமாலை சூடி பூசைகள் புரிந்தோம்
பாமாலை பாடி பஜனைகள் செய்தோம்
இசையில் ... உருகி ... அருகில் ... வருவாய்
அருள்வேண்டி உனைப்பாடும் அடியார் முன் வா வா
அம்பிகையே அருள் தந்திட வா (2)

சிவகாம ...

## 6. தெய்வமே சிவகாமித்தாயே

தெங்குடன் மாங்கனி தூங்கும்
நுங்குடன் பனைகளும் ஓங்கும்
தங்கமாய் நெல் வயல் சூழ் தென்மராட்சியின்
பெருநாவலடி யுறை தாயே.

( தெங்குடன் ..

கையினில் வேப்பிலை ஏந்தி
காரிகை வடிவு நீ தாங்கி
மெய்யடியார்களின் வேதனை தீர்த்திடும்
தெய்வமே சிவ காமித் தாயே.

( தெங்குடன் ...

பட்டரின் துயரினை போக்க
வட்டநிலா வினைக் காட்டி
துட்டரின் துடுக்கினைத் துடைத்த எம் தேவியே
கட்டழகே எம் முன் வா வா

( தெங்குடன் ...

கல்லினைப் போலிருந்தாலும்
வல்வினை தீர்த்திடும் தாயே
பேதையர் அறிவரோ பேரருட்கருணையை
வாதைகள் தீர்த்திட வாராய்

( தெங்குடன் ...

## 7. கதறிடும் எங்களைப் பாருமம்மா

நாவலடியுறை சிவ காமி
பாவில் பரிந்திங்கே வருவாய் நீ
பூவிலிருந்திடும் கலைவாணி - எம்
நாவில் இருந்தருள் புரிவாய் நீ (2)

( நாவலடியுறை ...

கொடிகாமந்தன்னில் கோவில் கொண்டாய்
அடியார்கள் மனங்கவர்ந்து நின்றாய்
மிடியோடு இங்கே வருபவரின்
குடிவாழ என்றும் அருள்புரிவாய். (2)
( நாவலடியுறை ...

கருணைக் கடலே சிவ காமி
கவிதைப் பொருளாய் அமர்வாய் நீ
இருளை ஒழிக்கும் ஒளியும் நீ - மன
மருளை ஒழித்து அருள்வாய் நீ (2)
( நாவலடியுறை ...

கதறிடும் எங்களைப் பாருமம்மா
கருணை பொழிந் தெமை க் காருமம்மா
பதறிடும் நிலையினை மாற்றிடவே
உருகியே ஓடி நீ வந்திடம்மா
( நாவலடியுறை ..

உலகினில் ஒரு துணையில் லையம்மா
உன திரு கண்களாற் பாருமம்மா
அலை கடல் மீதினிற் துரும்பினைப் போல்
அனுதினம் வாழ்கிறோம் பாருமம்மா
( நாவலடியுறை..

## 8. தேவருந் தேடும் தேவியே வா

கல்யாணியே கலைவாணியே காமாட்சியே
எம் முன் வா
பல்லாயிரம் துதி பாடினோம் சிவ காமியே
எம் முன் வா
( கல்யாணி ...

மதுரையிலே நீ மீனாட்சி
காஞ்சியில் நின்பெயர் காமாட்சி
நாவலடியினில் சிவகாமி - இந்த
நாவலடியினில் சிவகாமி
( கல்யாணியே ...

மகிடா சுரனை மாய்த்தவளே
நெகிழா மனத்தையும் நெகிழ்ப்பவளே
அழகே நின் அருளினைத் தாருமம்மா எங்கள் (2)
( கல்யாணியே ...

தாமரைப் பூவுறை நாயகியே
பாவலர் நாவுறை பார்வதியே
தேவருந் தேடுந் தேவியே வா பெருந் (2)
( கல்யாணியே ..

அரஹர சிவ சிவ அம்பிகையே
ஒரு தரம் உனதிரு கண்களாற் பார்
தரணியியில் அமைதியைத் தாருமம்மா

( கல்யாணியே ...

பலபிணி சூழ்ந்தேமை வருத்துதம்மா
பார்த்திட யாருமேயில்லையம்மா
பார்வையால் எங்குறை தீருமம்மா அன்புப் (2)

( கல்யாணியே ...

## 9. கருணைக் கடலே சிவகாமி

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

அம்மா தாயே சிவகாமி
இம்மா நிலத்தைக் காப்பாயே
கருணைக் கடலே சிவகாமி
கவலை தீர அருள்வாய் நீ

( அம்மா தாயே ...

காலை மாலை தினந்தோறும்
கருதித் தொழுதோம் உன் கழலே
மாலை சூடி உனைப் பணிந்தோம்
மகிழ்வை எமக்குத் தாருமம்மா

( அம்மா தாயே ...

சிலையாய் இருந்தது போதுமம்மா
சிலிர்த்து எம் முன் வாருமம்மா
மலை போல் துயரம் வந்தாலும்
மாபோல் பொடிபடச் செய்யுமம்மா

( ஓம் சக்தி ...

கொல்லும் வினைகள் வாட்டுதம்மா
கோலமயிலே பாருமம்மா
வெல்லும் நிலையைத் தந்திடம்மா
வீரத்தாயே சிவகாமி

( ஓம் சக்தி ...

## 01. தூற்றி நின்றோரும் துதித்திடும் தேவி

நாவலடியுறையும் சிவகாமி - என்றும்
காவல் தரவருவாள் அபிராமி
பாவை வடிவிலிங்கே வருவாளாம் - எங்கள்
தேவை அறிந்துதவி புரிவாளாம்

( நாவலடியுறையுப் ...

சிலை வடிவானவள் கன் சிவகாமி - ஆனால்
கலை வடிவெடுத்திங்கே சதைத்திடுவாள்
அலை அலையாய் மோதும் அடியார்கள் - மன
நிலைகளைக் கூறி அருமருந்தளிப்பாள்
( நாவலடியுறையும் ...

கையினில் வேப்பிலையைக் கொண்டிடுவாள் - திரு
நீற்றினை மெய்யினிலே பூசிடுவாள்
தூற்றி நின்றோரும் இங்கே துதித்திடவே - அருள்
ஆற்றலால் அனைவரையும் அணைத்திடுவாள்
( நாவலடியுறையும் ...

11. உதவ மனமின்றி உறங்கலாமோ அம்மா

# கீர்த்தனை

இராகம் : கானடா தாளம் : ஆதி

## எடுப்பு

தாயே நீதா அம்மா அமைதியைத்தாயே நீதா - உன்
அன்புக் குழந்தைகளின் அலறும் நிலை மாற்றி
( தாயே ..

## தொடுப்பு

தவறேதும் செய்தோமில்லை தாயே ஏன் இந்தத் தொல்லை
கதறும் நின் தொண்டர் சிதறும் நிலை கண்டு
உதவ மனமின்றி உறங்கலாமோ சொல்
( தாயே

## முடிப்புகள்

நாவலடியிருந்து நல்லருள் பொழிபவளே - என்
பாவில் விரும்பி என்னை பாடிட வைத்தவளே
கூவி அழைத்து உன்னைக் கும்பிடுகின்றோமம்மா
தாவி நீ முன்னே வந்து தஞ்சமே தாருமம்மா
( தாயே நீ தா ...

அரக்கரின் கொடுமையை அழித்த என் தாயன்றோ
மனக்கவலை மாற்றும் மா மருந்தும் நீயன்றோ
இரக்கமும் இல்லையோ இன்னும் நான் செல்லவோ
சுரக்கும் அருள் பொங்க சுந்தரியே நீவா
தாயே நீ தா -

## 12. கண்களிலே நீர் பெருகக் கனிந்து பாடுங்கள்

சிவகாமியிடம் ஓடி வாருங்கள் - உங்கள்
பாவ வினை ஓடும் பாருங்கள் - அவள்
பாதமலர் பணிந்து நில்லுங்கள் - உங்கள்
வேதனைகள் தீரும் பாருங்கள்

( சிவகாமியிடம்

நாவலடி நாயகியை நயந்து பாடுங்கள்
மேவிடும் துயர்கள் கூட விலகும் பாருங்கள்
பாடல்களைப் பற்றுடனே பணிந்து பாடினால்
ஓடி வந்து உங்கள் முன்னே காட்சி தருவாள்

( சிவகாமியிடம் ..

அன்பு என்ற ஒன்றை மட்டு சுமந்து வாருங்கள்
ஆணவத்தை அடியோடு மறந்து வாருங்கள்
கண்களிலே நீர் பெருகக் கனிந்து பாடுங்கள்
துணையெனவே அன்னைவந்து துயரங்களைவாள்

( சிவகாமியிடம் —

அன்னையது சந்நிதிக்கு ஓடி வாருங்கள் - அவள்
சொன்னபடி பணிகளையே செய்து பாருங்கள்
என்ன வினை எம்மை வந்து வந்து வதைத்தபோதிலும்
அன்னை வந்து அவற்றை எல்லாம் அழித்து விடுவாள்

( சிவகாமியிடம் ...

## 13. நம் குறை தீர்க்கும் நாவலடித் தாய்

சிவகாமியின் திருவருள் பெற்று மகிழ்ந்திட
தினமிங்கே கூடிடுவோம்
அவள் அருள் பெற்று நாம் அறுதல் அடைந்திட
அன்புடன் பாடிடுவோம்.

தெங்குடன் தீங்கனி செழித்திங்கு தூங்கும்
எங்கணும் சோலைகள் எழிலுற ஓங்கும்
நங்குறை தீர்த்திட நாவலடிதனில்
நங்கையாய் வந்தவளே

( சிவகாமியின் ...

அனுதினம் அன்னையின் ஆலயம் வந்து
உனதிரு கண்களால் பாரென நொந்து
மனதினில் கவலையை மாற்றிடுவாயென
மன்றாடி வேண்டிடுவோம் - எங்கள்

( சிவகாமியின் ..

கால்களில் சிலம் பொலி கலீர் கலீரென
கண்களில் அருள் ஒளி பளீர் பளீரென
கதறிடும் அடியவர் கவலைகள் களைந்திட
கண்முன்னே வந்திடம்மா - இங்கே

( சிவகாமியின் ...

டண் டண் டண் ணென மணிகள் ஒலித்திட
டும் டும் டும்மென மத்தளம் கொட்டிட
தெய் தெய் தெய் யென நர்த்தன மாடியே
பையவே வந்திடம்மா

( சிவகாமியின் ...

கண்மணியே எங்கள் கற்பகமே வா
கடினே வந்து உன் காட்சியைத் தா ... தா
மண்ணினில் அமைதியும் மனத்தினில் மகிழ்ச்சியும்
தந்திட வந்திடம்மா - என்றும்

( சிவகாமியின் ...

## 14. கீர்த்தனை

இரகம் : ரஞ்சினி        தாளம் : ஆதி

அன்னையே உன்னருள் தருவாயம்மா
அபிராமி சங்கரி சிவகாம சுந்தரி
அன்போடு என் நாவில் வாழும் சரஸ்வதி

உனையன்றி எமைக் காக்க துணையாரம்மா
உனை நம்பினோம் விரைந்தோடி வா

( அம்மா ... அன்னையே ...

நறைமிகு மலர் மாலை நயந்து நான் சூட்டினேன்
நாவார உனைப் போற்றி பாமாலை பாடினேன்
நான் செய்த பிழைகளெல்லாம் பொறுத்தெனையாளம்மா
நாவலடியுறையும் சிவகாமி நீ அம்மா

( அன்னையே ...

அன்னையும் தந்தையும் ஆசானும் நீயன்றோ
சுற்றமும் சூழலும் சுகங்களும் நீயன்றோ
என்னையும் ஆண்டிங்கே இன்னருள் புரிகின்ற
ஈஸ்வரியே எங்கள் சிவகாமி நீயம்மா

( அன்னையே ...

தரணியில் தர்மமே அழிவதைப் பாரம்மா
தவிக்கின்ற மக்களின் குரலினைக் கேளம்மா
தாங்காது இனிமேலும் தாயே நீ ஓடி வா
தூங்காதே துயர் தீர்க்கும் சிவகாமி நீயம்மா

( அன்னையே ...

## 15. முருகனிடம் உருகுவோம்

அன்பர் மனம் கோவிலாகக் கொண்டவனே வேலவா
என்புருகப் பாடுகிறோம் ஓடி வா வேலவா
வேல் முருகா வேல் முருகா வேல் முருகா வேல் வேல்
வா முருகா வா முருகா வா முருகா வா வா

இன்பவடிவானவனே எங்குருவே சண்முகா
துன்ப நிலை மாற்றிடவே துணைருவாய் வேலவா
சிவகாமி புத்திரனே சிவபாலா வேலவா
அவமாகும் வாழ்வை இங்கே தவமாக்க ஓடிவா

நல்லை நகர் நாயகனே நங்குருவே வேலவா
தொல்லைகளைத் தீர்த்திடவே துணை வருவாய் வேலவா
ஆற்றங் கரை வேலவனே ஆறுமுகா சண்முகா
ஆறுதலைத் தந்திடப்பா ஆறுமுகா வேலவா
(வேல் முருகா வேல் முருகா ...

கதிர்காமக்கந்தனே எம் கார்த்திகேயா சண்முகா
எதிர் நின்று காருமையா ஏந்தலே எம் சண்முகா
இராமாவில் பதியிருந்து காப்பவனே சண்முகா
தீராத நோய்களெல்லாந் தீர்த்து வைப்பாய் வேலவா
(வேல் முருகா வேல் முருகா ...

ஆறு படை வீட்டினிலே வீற்றிருக்கும் வேலவா
கூறுமடியார்கள் வினை தீர்த்திடும் எம் வேலவா
பச்சை மயில் மீது வரும் பன்னிருகை வேலவா
அச்ச நிலை மாற்றிடவே அன்னையுடன் ஓடி வா
(வா முருகா வா முருகா ...

## 16. கண்ணனின் குறும்பில் கனிந்திடும் அன்பு

கண்ணா கண்ணா வா வா எங்கள் கார்முகில் வண்ணா வாவா
வெண்ணெய் திருடிய வேயிளைலே உந்தன் அன்னையிடம்
பிடிபட்டவனே
கலியுக தெய்வம் நீ ஐயா கலங்கிடும் எங்களைப் பாரையா
கவலைகள் தீர்த்திட கண்ணாவா கருணை பொழிந்திடும் மன்னாவா

தரணியில் தர்மம் நிலைத்திடவே தசரத மைந்தனாய் வந்தவனே
மரண பயத்தை ஒழித்தருளே சரண சரணமடைந்தோம் சந்நிதியில்
இப்புவி மாந்தர் மகிழ்ந்திடவே இரண்யனை நீ கொன்றவனே
இன்னருளைத் தர கண்ணா வா எங்களையாண்டிடும் மன்னாவா

பேதை கலங்கிய வேளையில் வண்ணச்சேலை கொடுத்த எம்
(கோகுலனே
வாதை யுறுகின்ற மக்களுக்கு பாதையைக் காட்டு பரந்தமா
கண்டவர் அஞ்சிய கம்சனையே கொன்றுகுவித்த எம் கோபாலா
நம்மவர் வருந்துதல் சம்மதமோ நம் துயர் தீர்த்திடு கோவிந்தா

கொடியவர் கொடுமைகளைந்திடவே கோகுலனாக வந்தவனே
மடிகின்ற மக்களைக் காப்பதற்கெப்படி வரப்போறாய்சொல்லப்பா
பூமியை வாட்டிய பூதனையைப்பூண்டுடன் அழித்த எம்புண்ணியனே
பாவிகள் எங்களைக்காத்திடவேபார்த்தருள்வாய்பார்த்தசாரதியே

## 17. அடியாரோடு அன்னை

வீதி வாரார் அன்னை வீதி வாரார் - இந்த
நாவலடி வீதி தேடி வாரார்
தேடி வாரார் எம்மைத் தேடி வாரார் - எங்கள்
தேவைகள் தீர்த்திடத் தேடிவாரார்

நாவலடியிதன் வீதியிலே அன்னை
நர்த்தன மாடியே வீதி வாரார்
பாவிகளின் குறை தீர்க்க வாரார்-எங்கள்
பைங்கிளியாள் எம்மைத் தேடி வாரார்

பாசமுடன் எம்மைப் பார்க்க வாரார் - எங்கள்
தோஷங்கள் நீக்கிட ஓடி வாரார்
வண்ண வண்ண மலர் மாலைகள் சூட்டியே
எண்ணங்கள் ஈடேற்ற எம் முன் வாரார்

சின்னஞ் சிறு சிவகாமி வடிவிலே
சிந்தை மகிழ்ந்திட எம் முன் வாரார்
செந்தமிழ்ப் பாவிசைகேட்டிடவே அன்னை
செப்புச் சிலையாக ஓடி வாரார்

மைந்தர்கள் தோளிலே சுமந்து வர அன்னை
அந்தரந் தீர்த்திட எம் முன் வாரார்
மேளதாள ஒலி வீதியில் ஓங்கிட
ஆடி அசைந்தெங்கள் அன்னை வாரார்

பாழும் நிலை மாற்ற அன்னை வாரார் -நாம்
வாழும் வழிகளைக் கூற வாரார்.
சூழும் வினையெல்லாம் ஓடிடவே - அன்னை
நாவலடி வீதி தேடி வாரார்.

## 18. அன்னை தன் அரண்மனைக்கு ....

திருவருள் செறிந்திடும் அருள் மழை பொழிந்திட
அடியாருடன் அன்னை வீதி வந்து
குருவடி வாய் வந்த அரிவையுடன் கூடி
அன்னை தன் அரண் மனை ஏகுகின்றார்

தத்தரிகிடதோம் தகததிங்கிணதோம்
தகதிமி தகதிமி என்றங்கே
நர்த்தன மாடியே நம்பிணி வீழ்த்திடுயே
அன்னை தன் அரண் மனை ஏகுகின்றார்

தேவரும் முனிவரும் தேயுடிங் காணா
திருவருட் காட்சியைத் காண்பதற்கு
ஆர்வமாய்க் கூடிய அடியவர்க் கருளியே
அன்னை தன் அரண்மனை ஏகுகின்றார்

பாவலர் பாமரர் யாவருந் தொழுதிட
ஆவலாய் அவர் குறைதனைக் கேட்டு
அவரவர் குறைகளை அருள்ளொடு மாற்றியே
அன்னை தன் அரண்மனை ஏகுகின்றார்

பூ மாலையுடன் நல்ல பாமழைதனில் அன்னை
தான் மகிழ்ந்தாடியே தன்னருளை
நாமிங்கு பெற்றிட நம்துயர் போக்கியே
அன்னை தன் அரண்மனை ஏகுகின்றார்

## 19. அன்னையின் காவலன்

வந்திப் பவர்க் கருள் வைரவநாதா
வைரவநாதா வல்வினை தீர்ப்பாய்

சூலமே காவலாய் கொண்டவனே
சூழ் வினை பறந்தோடச் செய்பவனே
ஞாலத்தைக் காத்திடும் வைரவனே
வைரவரே எங்கள் வைரவரே
வல்வினை தீர்த்திடும் வைரவரே
( வந்திப்பவர் ...

வடை மாலை நாமிட்டு வணங்குகின்றோமே
தடைகளிலிருந்தெமைக் காத்தருளே
சடையுடை திருவுடை நாயகரே
நாயகரே எங்கள் காவலரே
அன்னையின் ஆலயக் காவலரே

( வந்திப்பவர் —

நாயினில் ஏறியே வாருமையா
நாம் பாடும் பாட்டினைக் கேளுமையா
தாயுடன் ஓடியே வாருமையா
வருமையா அருள் தாருமையா
வருந்திடும் எங்களைப் பாருமையா

( வந்திப்பவர்

## 20. அன்னைக்கும் அனைவர்க்கும் மங்களம்

அன்னை அன்னை அன்னை எங்கள்
அம்பிகைக்கு மங்களம்
ஆதிசத்தியான சிவகாமிக்கின்றே மங்களம்
நாவலடி வீற்றிருக்கும் நாயகிக்கும் மங்களம்
ஆவலுடன் பாமலர்கள் பாடினோர்க்கும் மங்களம்
அன்னையுடன் வீற்றிருக்கும் ஐங்கரர்க்கும் மங்களம்
அகில மதைச் சுற்றி வந்த அறுமூர்க்கும் மங்களம்
எல்லையிலே காவல் காக்கும் வைரவர்க்கும் மங்களம்
எல்லோரையும் ஆட்டி வைக்கும் ஈசுரர்க்கும் மங்களம்
அட்டதிக்குப் பாலகர்க் கனந்தகோடி மங்களம்
துட்டவினை சேர்ந்திடாமல் சொல்லுகிறோம் மங்களம்
( மங்களம் —

மங்களம் சுப மங்களம் மங்களம் ஜெய மங்களம்
மங்களம் சுப மங்களம்
மங்களம்! மங்களம்!! ( மங்களம் ...

ஓம் நமப் பார்பதி பதயே (3)
அரஹர மகா தேவா (3)
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க (3)
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி

ஓம் ஸ்ரீ நாவலடி சிவகாம சுந்தரி அம்பிகைக்கு
அரோஹரா.